# *மலைப்பிரசங்கம் 04 – சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்*

***மத்தேயு 5:3-4, ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது. 4. துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதலடைவார்கள். 5. சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்.***

*பெருமையுள்ளவர்கள், கடினமானவர்கள், மற்றும் முரட்டுத்தனமான மனிதர்களே பூமியை சுதந்தரிக்கிறவர்கள் என்று உலகம் சொல்லுகிறது. அதுவே இப்பூமியில் வாழுவதற்கான தகுதியாகக் கருதப்படுகிறது. ஆனால் சாந்தகுணமுள்ளவர்கள் பூமியை சுதந்தரிப்பார்கள் என்று இயேசு சொல்லுகிறார். மற்ற மலைப் பிரசங்க போதனைகளைப் போலவே இதுவும் முரண்பாடானது.*

*மலைப்பிரசங்கம், "பரலோக இராஜ்யம் அவர்களுடையது" என்றே துவங்கி முடிகிறது. இந்த குணாதிசயங்கள் நம்முடைய வாழ்க்கையில் இல்லை என்றாலோ அல்லது குறைவாயிருக்கிறது என்றாலே நாம் பரலோக இராஜ்யத்திற்குள் பிரவேசிக்க முடியாது.*

### ***சாந்த குணம்***

*"**பிராஸ்**" என்னும் கிரேக்க வார்த்தையே சாந்தகுணம் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.*

*இது "மென்மை" என்று ஆங்கில மொழிபெயர்ப்புகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.*

*ஆனால் "**பிராஸ்**" (சாந்தம்) என்ற வார்த்தைக்கு பெலவீனன் என்று அர்த்தமில்லை.*

*காட்டு மிருகங்களுக்கு எதிராக, நாட்டு மிருகங்களைக் குறிக்க இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது.*

*பின்பாக, ஒழுங்கான நடத்தையுள்ள மக்களைக் குறிக்க இப்பதம் பயன்படுத்தப்பட்டது.*

***கிரேக்க தத்துவஞானியான அரிஸ்டாட்டில்** இந்த வார்த்தையை வாழ்க்கையின் முக்கியமான பண்பாக பயன்படுத்துகிறார். அவர், "சரியான சூழலில் சரியான நபரிடத்தில் சரியான நேரத்தில் சரியான அளவு கோபப்படுகிற மனிதனைக் குறிக்கிறது" என்று சொல்லுகிறார்.*

*அதாவது, "அதிகப்படியான கோபத்திற்கும் கோபத்தை கொஞ்சமும் வெளிக்காட்ட இயலாமைக்கும் இடைப்பட்ட உணர்வு."*

*அரிஸ்டாட்டிலின் இந்த வார்த்தைப் பயன்பாட்டைக் கருத்தில்கொண்டு **வில்லியம் பார்க்ளே** இந்த மலைப்பிரசங்க போதனையை "அவசரப்பட்டோ அல்லது மிகப்பொறுமையாகவே இல்லாமல், எப்போதும் சரியான நேரத்தில் கோபப்படுகிற, எப்போதும் தவறான நேரத்தில் கோபப்படாத மனிதன் பாக்கியவான்" என்று மொழிபெயர்க்கிறார்.*

*மேலும் பார்க்ளே, நம்மை நாமே காயப்படுத்திக்கொள்ளுகிற அல்லது நாம் அவமதிக்கப்படுகிற தருணங்களே நமக்கு கெட்ட நேரங்கள் என்கிறார். ஆனால்*

*காயப்பட்டுக்கொண்டிருக்கிறவர்கள் மீது ஏற்படும் சுயநலமில்லாத கோபமே நம்முடைய நல்ல நேரம் என்கிறார்.*

*இயேசுவின் வார்த்தைகள் சங்கீதம் 37லிலிருந்து வருகிறது.*

***சங்கீதம் 37:11,22, சாந்தகுணமுள்ளவர்கள் பூமியைச் சுதந்தரித்து, மிகுந்த சமாதானத்தினால் மனமகிழ்ச்சியாயிருப்பார்கள். அவரால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள்; அவரால் சபிக்கப்பட்டவர்களோ அறுப்புண்டுபோவார்கள்.***

***யார் சாந்தகுணமுள்ளவர்கள்?***

***யார் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்?***

- *கர்த்தரை நம்பி நன்மைசெய் (வச. 3)*
- *கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு (வச. 4)*
- *உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவி (வச. 5)*
- *கர்த்தரை நோக்கி அமர்ந்து, அவருக்குக் காத்திரு (வச. 7).*

## *1. சாந்தகுணமுள்ளவர்கள் தெய்வீகத்தினால் கட்டுப்படுத்தப்படுகிறார்கள்?*

*இந்த கிரேக்க வார்த்தையானது, காட்டு மிருகமாயிருந்து அதற்கு பின்பு கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டு, பின்னர் தன் எஜமானனுடைய சத்தத்திற்கு செவிகொடுக்கிறதைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு முன்பாக அந்த விலங்கை கட்டுப்படுத்துவது சாத்தியமில்லாதிருந்தது. ஆனால் முறையான பயிற்சிக்குப் பின்னால், தற்போது அது அதின் எஜமானனுடைய சத்தத்திற்கு கீழ்ப்படிகிறது.*

*இதுவே விசுவாசிகளின் உண்மையான அடையாளம்!*

*நாம் இரட்சிக்கப்பட்டு முதன்முறையாக கிறிஸ்துவுக்குள் வந்தபோது நாம் பெரும்பாலும் முரட்டாட்டம் பண்ணுகிறவர்களாயும், நம்முடைய எஜமானை முழுமையாய் நம்பாமலும் அவருக்கு செவிகொடுக்காமலும் இருந்தோம். ஆனால் நமக்கு அனுமதிக்கப்பட்ட சோதனைகள் மற்றும் ஆசீர்வாதங்களின் மூலமாக அவர் மீது நம்பிக்கை வைத்து, அவருக்கு கீழ்ப்படிவது எப்படி என்பதை தேவன் நமக்குக் கற்றுக்கொடுத்தார்.*

***ஆபிரகாமின் வாழ்க்கை:***

*ஆபிரகாம் முதன்முறையாய் தேவனுடைய சத்தத்திற்கு செவிகொடுக்கும்போது, தன்னுடைய வீட்டையும் தனக்குண்டான யாவற்றையும் விட்டுவிட்டு தேவன் அவருக்கு அழைப்பு கொடுத்த தேசத்திற்கு புறப்படவேண்டியதாயிருந்தது.*

*ஆதியாகமம் 11ஆம் அதிகாரம் சொல்லுவதுபோல, ஆபிரகாம் தனக்குண்டான எல்லாவற்றையும் விட்டுவிட்டு போகவில்லை. அவர் கானானுக்கு போகிற பாதையின் இடையில் தங்கினார். அவர் தன்னுடைய தகப்பனார், உறவினர் ஆகியோரை தன்னோடே*

*கூட்டிக்கொண்டு வந்து, அவருடைய தகப்பனார் மரிக்கும்வரையிலும் ஆரானிலே தங்கியிருந்தார்.*

*ஆபிரகாம் தேவனுக்கு முற்றிலும் கீழ்ப்படியவில்லை. அவருடைய கீழ்ப்படிதல் முழுமையானது அல்ல, அது தாமதித்தது. அவர் கடைசியாய் வாக்குப்பண்ணப்பட்ட தேசத்திற்கு வந்து சேர்ந்தபோது அங்கே பஞ்சம் நிலவியது. ஆகையினால் அவர் எகிப்துக்கு புறப்பட்டுபோய், அங்கே தன்னுடைய மனைவியை பார்வோனிடத்தில் பறிகொடுக்கும் அளவுக்கு சோதனையை சகிக்கவேண்டியிருந்தது (ஆதியாகமம் 12).*

*பின்பாக, ஆபிரகாம் வாக்குப்பண்ணப்பட்ட குமாரனுக்காய் காத்திருக்கும் தருவாயில், அந்த பொறுப்பை தானே தன் கையில் எடுத்து செயல்படுத்த எண்ணி, அவருடைய மனைவியின் அடிமைப் பெண்ணிடத்தில் பிரவேசிக்கிறார் (ஆதியாகமம் 16).*

*அதுவே அவருடைய குடும்பத்தில் பெரிய போராட்டத்திற்கு காரணமாகியது. யூதர்களுக்கும் அரபியர்களுக்குமான அந்த போராட்டம் இன்றுவரை தொடர்கிறது.*

*எனினும், ஆதியாகமம் 22ஆம் அதிகாரத்தில், தேவன் ஆபிரகாமுடைய குமாரனாகிய ஈசாக்கை தனக்கு பலியிடும்படிக்கு கேட்கும்போது, அது தனக்கு மிகப்பெரிய இழப்பு என்றபோதிலும் ஆபிரகாம் தேவனுடைய சத்தத்திற்கு கீழ்ப்படிகிறார்.*

***எபிரெயர் 11:19, தனக்கு ஒரேபேறானவனையே பலியாக ஒப்புக்கொடுத்தான்; மரித்தோரிலிருந்து அவனை பாவனையாகத் திரும்பவும் பெற்றுக்கொண்டான்.***

*தேவன் தன்னுடைய குமாரனை மரணத்திலிருந்து உயிர்த்தெழச்செய்வார் என்று ஆபிரகாம் விசுவாசித்ததினால், அவர் தன்னுடைய குமாரனை துணிந்து பலிசெலுத்த முன்வருகிறார்.*

*அவ்வாறு தொடர்ந்து பல ஆண்டுகளாய் தேவனோடு நடந்த ஆபிரகாம், அவ்வப்போது தடுமாறினாலும், அவர் தேவனை தொடர்ச்சியாக நம்புவதற்கும் கீழ்ப்படிவதற்கும் கற்றுக்கொண்டார். ஆபிரகாம் சாந்தகுணத்தில் வளர்ந்தார்.*

*தாமதமான கீழ்ப்படிதலுக்கும், அல்லது கீழ்ப்படியாமைக்கும் உடனே பதில்கொடுக்காமல், தேவன் ஆபிரகாமை காத்திருக்கச் செய்து, அவருக்கு சோதனைகளை அனுமதித்து, சங்கடமான சில காரியங்களை அனுமதித்து, அவருக்கு கீழ்ப்படிதலைக் கற்றுக்கொடுக்கிறார். ஆபிரகாம் சாந்தகுணத்தில் வளர்ந்து, முற்றிலும் தேவனால் கட்டுப்படுத்தப்படுகிற நபராய் மாறுகிறார்.*

*காரியங்கள் நமக்கு சாதகமாய் இல்லையென்றபோதில், சில இளம் கிறிஸ்தவர்கள் நிதானம் இழந்துவிடுகின்றனர். அவர்கள் அரைகுறையாய் பயிற்சியளிக்கப்பட்ட குதிரையைப் போன்றவர்கள். அது தன் எஜமானனை முழுமையாய் நம்பாமல், அவரை கீழே கவிழ்த்துவிடும்.*

***சங்கீதம் 32:8-9, நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன். 9. வாரினாலும் கடிவாளத்தினாலும் வாய் கட்டப்பட்டாலொழிய, உன் கிட்டச் சேராத புத்தியில்லாக் குதிரையைப்போலவும் கோவேறு கழுதையைப்போலவும் இருக்கவேண்டாம்.***

*முதிர்ந்த கிறிஸ்தவர்களாய் தேவன் நம்மை சில வேளைகளில் கட்டயாப்படுத்திக் கீழ்ப்படியப்பண்ணுகிறார். அவர் நம்மை சாந்தகுணமுள்ளவர்களாய் மாற்றுவதற்கு*

*பயிற்றுவிக்கிறார். ஆனால் நாம் வளரும்போது, அவருடைய வார்த்தையும் இன்பமும் நமக்கு போதுமானது.*

*மோசே:*

***எண்ணாகமம் 12:3, மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவனாயிருந்தான்.***

*மோசே சாதாரணமான ஒரு ஏழைப் பெற்றோருக்கு பிறந்து, குழந்தைகளைக் கொல்லும் பார்வோனின் திட்டத்திலிருந்து தெய்வாதீனமாய் காப்பாற்றப்பட்டு, பார்வோன் குமாரத்தியினால் எகிப்திய அரமணையில் வளர்க்கப்படுகிறார் (யாத்திராகமம் 2).*

*மோசேக்கு நாற்பது வயதானபோது, தன்னுடைய தேசத்து மக்கள் ஒருவனை ஒரு எகிப்தியன் துன்புறுத்துவதைப் பார்க்கிறார். அந்த எபிரெயனை துன்புறத்தும் அந்த எகிப்தியன் மீது கோபங்கொண்டு அவனை கொலை செய்துவிடுகிறார்.*

*பார்வோன் அதைக் கேள்விப்பட்டதை அறிந்த மோசே மீதியானுக்கு ஓடிப்போகிறார். அங்கே திருமணம் செய்துகொண்டு அடுத்த நாற்பது ஆண்டுகள் ஆடு மேய்த்துக்கொண்டிருக்கிறார்.*

*மோசேக்கு எண்பது வயதானபோது, தேவன் எரிகிற முட்செடி மூலமாய் மோசேக்கு தரிசனமாகி, எகிப்தில் அடிமைப்பட்டிருக்கிற தன்னுடைய ஜனத்தை விடுவிக்கும் ஊழியத்தை செய்யும்படிக்கு அழைப்பு விடுக்கிறார் (யாத்திராகமம் 3).*

*பார்வோனுக்கு பயந்து ஓடிப்போன மோசே தற்போது தேவனை முகமுகமாய் தரிசித்து பார்வோனுக்கு முன்பாக நிற்கிறார். மோசேயின் மூலமாய் தேவன் எகிப்தின் மீது பத்து வாதைகளை அனுமதித்து, அதின் வளத்தை முற்றிலும் அழிக்கிறார். எகிப்தியர்களின் விக்கிரகங்களை செயலிழந்தவைகளாய் மாற்றுகிறார். தேவனுடைய ஜனமான இஸ்ரவேல் விடுவிக்கப்படுகிறது (யாத்திராகமம் 7-12).*

*தேவன் மோசேவை இஸ்ரவேலர்களுக்கு தலைவனாக்கி, அவர்களை வனாந்திரத்தின் வழியாய் நடத்தக் கொண்டுபோகும்படிக்கு செய்கிறார். செங்கடலைக் கடந்து சீனாய் வனாந்திரத்திற்கு வருகிறார்கள். அந்த பாதையில் மோசேயின் மூலமாய் தேவன் பல்வேறு அற்புதக் கிரியைகளை நடப்பிக்கிறார்:*

- *செங்கடல் இரண்டாய் பிளந்து அதின் வழியாய் கடந்து வருகிறார்கள். அவர்களை துரத்தி வந்த எகிப்திய சேனைகள் செங்கடலில் மூழ்கடிக்கப்படுகின்றனர் (யாத்திராகமம் 14).*
- *மாராவின் தண்ணீரை மதுரமாய் மாற்றியது (யாத்திராகமம் 15)*
- *ரெவிதீமில் நிரூற்றை ஏற்படுத்தியது (யாத்திராகமம் 17)*
- *அமலேக்கியர்களை முறியடித்தது (யாத்திராகமம் 17)*
- *சீனாய் மலையில் தேவனிடத்திலிருந்து பத்துக் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டது (யாத்திராகமம் 19)*
- *பொன் கன்றுக்குட்டியின் மூலம் விக்கிரக ஆராதனை என்னும் ஜனங்களின் முரட்டாட்டத்தை தணியப்பண்ணுகிறார் (யாத்திராகமம் 32)*

- *மீதமிருக்கும் யாத்திராகம புத்தகத்திலும் லேவியராகமத்திலும் கர்த்தருடைய வழியை ஜனங்களுக்கு போதிக்கிறார்.*

*தேவன் மோசேயை அவரடைய உடன்பிறப்புகளான மிரியாம் மற்றும் ஆரோன் ஆகியோர்களைக் காட்டிலும் மேன்மையான ஒரு ஸ்தானத்திற்கு தகுதிப்படுத்தியிருந்தார் என்பதற்கு இவைகளெல்லாம் மிகவும் தெளிவான உதாரணங்கள்.*

*ஆனாலும் **எண்ணாகமம் 12ஆம்** அதிகாரத்தில் மிரியாம் ஆரோனை தூண்டிவிட்டு மோசேயின் எத்தியோப்பியா தேசத்து மனைவியினிமித்தம் மோசேக்கு விரோதமாய் விவாதம் பண்ணினார்கள்.*

*மோசே தன் தரப்பு நியாயத்தை விளங்கப்பண்ண முயற்சிக்கவில்லை. ஆனால் தேவன் மோசேயின் சார்பில் இடைபட்டு அவர்களை கடிந்துகொண்டு, தேவனோடு மோசேக்கு இருந்த உறவையும் தேவன் அவரை ஏற்படுத்தியிருந்த ஸ்தானத்தையும் அவர்களுக்கு விளங்கப்பண்ணுகிறார். மிரியாமுக்கு வெண்குஷ்டம் ஏற்பட அனுமதிக்கிறார். ஆரோன் தன்னுடைய தப்பிதத்தை உணர்ந்து மோசேயோடு ஒப்புரவாகி, தன்னுடைய சகோதரியின் நிலைக்காய் மோசேயோட சேர்ந்து தேவனிடத்தில் மன்றாடுகிறார்கள். அவளுடைய அந்த இலச்சையான நிலையில் ஏழு நாட்கள் அனுமதித்த தேவன், அதற்கு பின்பு மிரியாமை குணப்படுத்துகிறார்.*

*__எண்ணாகமம் 16ஆம்__ அதிகாரத்தில் இடம்பெற்றுள்ள வேறொரு சம்பவம் மோசேயின் சாந்தகுணத்தைப் பிரதிபலிக்கிறது. அதில் கோராவும் அவனோடு சேர்ந்து மற்ற லேவியர்களும் ஆரோனுக்கும் அவனுடைய சந்ததிக்கும் ஆசாரியத்துவ ஊழியத்தைக் கொடுத்ததினிமித்தம் மோசேயிடம் முரட்டாட்டம் பண்ணுகிறார்கள்.*

*மோசே முகங்குப்புற விழுந்து தேவன் தான் தெரிந்துகொண்டவனை எவ்வாறு விளங்கவைப்பது என்று வேண்டிக்கொள்ளுகிறார்.*

***எண்ணாகமம் 16:11, இதற்காக நீயும் உன் கூட்டத்தார் அனைவரும் கர்த்தருக்கு விரோதமாகவே கூட்டங்கூடினீர்கள்; ஆரோனுக்கு விரோதமாக நீங்கள் முறுமுறுக்கிறதற்கு அவன் எம்மாத்திரம் என்றான்.***

*அவர்கள் ஆரோனுக்கு விரோதமாய் முறுமுறுப்பதற்கு அவன் எவ்விதத்திலும் பாத்திரவான் இல்லை; அவர்கள் தேவனுக்கு விரோதமாய் முறுமுறுக்கிறார்கள் என்று மோசே அவர்களுக்கு அறிவிக்கிறார்.*

*மோசேயின் ஆலோசனைக்கு செவிகொடுக்காதவர்கள் மோசேயை குற்றப்படுத்த துணிந்தார்கள்.*

***எண்ணாகமம் 16:13-14, இந்த வனாந்தரத்தில் எங்களைக் கொன்றுபோடும்படி, பாலும் தேனும் ஓடுகிற தேசத்திலிருந்து எங்களைக் கொண்டுவந்தது அற்பகாரியமோ, எங்கள்மேல் துரைத்தனமும் பண்ணப்பார்;க்கிறாயோ? 14. மேலும் நீ எங்களைப் பாலும் தேனும் ஓடுகிற தேசத்துக்குக் கொண்டுவந்ததும் இல்லை, எங்களுக்கு வயல்களையும் திராட்சத்தோட்டங்களையும் சுதந்தரமாகக் கொடுத்ததும் இல்லை; இந்த மனிதருடைய கண்களைப் பிடுங்கப்பார்க்கிறாயோ? நாங்கள் வருகிறதில்லை.***

*அதற்கு மோசேயின் பதில்.*

***எண்ணாகமம் 16:15, அப்பொழுது மோசேக்குக் கடுங்கோபம் மூண்டது; அவன் கர்த்தரை நோக்கி: அவர்கள் செலுத்துங் காணிக்கையை அங்கிகரியாதிருப்பீராக; நான் அவர்களிடத்தில் ஒரு கழுதையை முதலாய் எடுத்துக்கொள்ளவில்லை; அவர்களில் ஒருவனுக்கும் யாதொரு பொல்லாப்பு செய்யவும் இல்லை என்றான்.***

*வசனம் 16-19இல் சோதனை அனுமதிக்கப்படுகிறது.*

*கோராவுக்கும் அவனோடு இருந்தவர்களுக்கும் தேவனுடைய நியாயத்தீர்ப்பு கொடுக்கப்படுகிறது.*

***எண்ணாகமம் 16:20-21, கர்த்தர் மோசேயோடும் ஆரோனோடும் பேசி: 21. இந்தச் சபையைவிட்டுப் பிரிந்து போங்கள்; ஒரு நிமிஷத்திலே அவர்களை அதமாக்குவேன் என்றார்.***

*மோசேயும் ஆரோனும் இந்த மனிதர்களாய் தவறாய் குற்றஞ்சாட்டப்பட்டாலும், தேவனுடைய ஜனத்தின் மீது அவருடைய இரக்கம் இருக்கும்பொருட்டாய் அவர்கள் தேவனிடத்தில் வேண்டிக்கொண்டார்கள்.*

***எண்ணாகமம் 16:22, அப்பொழுது அவர்கள் முகங்குப்புற விழுந்து: தேவனே, மாம்சமான யாவருடைய ஆவிகளுக்கும் தேவனே, ஒரு மனிதன் பாவம் செய்திருக்கச் சபையார் எல்லார்மேலும் கடுங்கோபங்கொள்வீரோ என்றார்கள்.***

*தேவன் இஸ்ரவேல் ஜனங்களை பாதுகாத்து, கோராவின் மீதும் அவனுடைய மனிதர்கள் மீதும் தெய்வீக நியாயத்தீர்ப்பு ஏற்படும்படிக்கு செய்கிறார். அதை மோசே 28ஆம் வசனத்தில் குறிப்பிடுகிறார்.*

*பூமி தன் வாயைத்திறந்து அவர்களை உயிரோடே பாதாளத்தில் இறங்கத்தக்கதாக அவர்களையும் அவர்களுக்கு உண்டான யாவையும் விழுங்கிப்போட்டதின் நிமித்தம் தேவனுடைய நியாயத்தீர்ப்பு அவர்கள் மீது அனுமதிக்கப்பட்டது.*

*மோசே தன்னுடைய தரப்பை நியாயப்படுத்தாததே அவருடைய சாந்தகுணத்திற்கான அடையாளம். அவர் தன்னுடைய குறையை தேவனுடைய சமுகத்திற்கு கொண்டுபோகிறார். ஆனால் அவர் தேவனுடைய கிரியையை முன்னிறுத்துவதில் அதிக உறுதியானவர்.*

*அவமதிப்புக்கு சாந்தமே சரியான பதிலாய் இருக்கிறது. மேலும் அதுவே தன்னுடைய அவமதிப்பையும் குறையையும் தேவனுடைய சமுகத்திற்கும் வெளிச்சத்திற்கும் கொண்டுசெல்லுகிறது. நம்முடைய கனத்தையும் ஸ்தானத்தையும் எதிர்பார்ப்பதல்ல, தேவனுடைய மகிமையை காண்பதே நம்முடைய நோக்கமாயிருக்கவேண்டும்.*

*2. சாந்தகுணமுள்ளவர்கள் குற்றஞ்சாட்டப்படும்போது தேவனையே நம்புவார்கள்.*

*இயேசு கிறிஸ்து இதை பல்வேறு விதங்களில் போதித்தும், தன்னுடைய வாழ்க்கையில் கடைபிடித்தும் இருக்கிறார்.*

***மத்தேயு 5:38-42, கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்று, உரைக்கப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். 39. நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தீமையோடு எதிர்த்து நிற்கவேண்டாம்; ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு***

***மறுகன்னத்தையும் திருப்பிக்கொடு. 40. உன்னோடு வழக்காடி உன் வஸ்திரத்தை எடுத்துக்கொள்ளவேண்டுமென்றிருக்கிறவனுக்கு உன் அங்கியையும் விட்டுவிடு. 41. ஒருவன் உன்னை ஒரு மைல் தூரம்வரப் பலவந்தம்பண்ணினால், அவனோடு இரண்டு மைல் தூரம் போ. 42. உன்னிடத்தில் கேட்கிறவனுக்குக் கொடு, உன்னிடத்தில் கடன்வாங்க விரும்புகிறவனுக்கு முகங்கோணாதே.***

*தன்னை அடிமைத்தனத்திற்கு விற்ற தன்னுடைய சகோதரர்களைப் பார்த்த யோசேப்பின் பதில். யோசேப்பின் தகப்பன் மரித்தபின்பு, யோசேப்பின் சகோதரர்கள் தங்களை யோசேப்பிடத்தில் முற்றிலும் சரணாகதியாக்கி, தங்களை அடிமையாக கருதும்படியாகவும், தங்களை கொல்ல வேண்டாம் என்றும் கெஞ்சினர்.*

***ஆதியாகமம் 50:19-21, யோசேப்பு அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; நான் தேவனா; 20. நீங்கள் எனக்குத் தீமைசெய்ய நினைத்தீர்கள்; தேவனோ, இப்பொழுது நடந்துவருகிறபடியே, வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு, அதை நன்மையாக முடியப்பண்ணினார். 21. ஆதலால், பயப்படாதிருங்கள்; நான் உங்களையும் உங்கள் குழந்தைகளையும் பராமரிப்பேன் என்று, அவர்களுக்கு ஆறுதல்சொல்லி, அவர்களோடே பட்சமாய்ப் பேசினான்.***

*அவர்களுக்கு ஆறுதல்சொல்லி, அவர்களோடே பட்சமாய்ப் பேசினான்.*

*"நான் தேவனா?" என்று அவர் கேட்கும்போது, அவர்களை நியாயந்தீர்ப்பது யோசேப்பின் அதிகாரத்திற்கு உட்பட்டது இல்லை என்பதை அறிக்கையிடுகிறார். அது தேவனுடைய அதிகாரம்.*

*யோசேப்பு அவர்களுக்கும் அவர்களின் பிள்ளைகளுக்கும் உதவிசெய்ய முன்வந்தார்.*

*ரோமர் 12:19-21, 19.* ***பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன், என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள். 20. அன்றியும், உன் சத்துருபசியாயிருந்தால் அவனுக்குப் போஜனங்கொடு, அவன் தாகமாயிருந்தால், அவனுக்குப் பானங்கொடு; நீ இப்படிச் செய்வதினால் அக்கினித்தழலை அவன் தலையின்மேல் குவிப்பாய். 21. நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு.***

*இதுவே கிறிஸ்து நேர்த்தியாய் கடைபிடித்த மாதிரி.*

*1 பேதுரு 2:23,* ***அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்.***

*மக்கள் உங்களை காயப்படுத்தினாலோ அல்லது அவமதித்தாலோ, நீங்கள் என்ன செய்வீர்கள்?*

*சாந்தகுணமுள்ளவர்கள் மென்மையாய் பதிலளிப்பார்கள்.*

*அவர்கள் ஆசீர்வதிப்பார்கள், சபிக்கமாட்டார்கள்.*

*அவர்கள் பழிவாங்க நினைக்கமாட்டார்கள்; மாறாக, அவர்களுக்கு உதவிசெய்ய முயற்சிப்பார்கள். நியாயத்தீர்ப்பை தேவனுடைய கரத்தில் விட்டுவிடுவார்கள்.*

***3. தேவன் கனவீனப்படும்போது சாந்தகுணமுள்ளவர்கள் நீதியாய் கோபங்கொள்ளுவார்கள்.***

*நீதியுள்ள கோபம் என்பது மிகச் சிறந்த ஒரு பண்பு.*

***சங்கீதம் 7:11, தேவன் நீதியுள்ள நியாயாதிபதி; அவர் நாள்தோறும் பாவியின்மேல் சினங்கொள்ளுகிற தேவன்.***

*தேவன் நாள்தோறும் பாவத்தின் மீது சினங்கொள்ளுகிறார்; ஆகையால் நாமும் அப்படியே செய்ய எதிர்பார்க்கப்படுகிறோம்.*

*நீதியுள்ள கோபமில்லையென்றால், பாவம் தொடர்ந்து நடக்கும், மக்கள் வஞ்சிக்கப்படுவர், தேவதூஷணம் நிகழும். அது என்றுமே மாறாமல் நிலைத்திருக்கும்.*

*நான் போதுமான அளவு கோபங்கொள்ளாததினால் பாவம் நம்மில் அடிக்கடி தொடர்கிறது.*

*சமுகத்தில் பரவியிருக்கும் பாவத்தைக் குறித்தோ, மற்றவர்களின் வேதனையைக் குறித்தோ, உலகத்தில் நிகழும் அநீதியைக் குறித்தோ நாம் பலவேளைகளில் கவலையற்றிருக்கிறோம். ஆகையால் தீமை தொடர்ந்து அதிக்கம் செலுத்தி வருகிறது.*

*சாந்தகுணமுள்ளவர்கள் தங்கள் மீது சாட்டப்பட்ட குற்றத்திற்கு மென்மையாய் பதிலளிப்பார்கள், ஆனால் மற்றவர்கள் அநீதியாய் நடத்தப்பட்டாலோ அல்லது காயப்படுத்தப்பட்டாலோ நீதியாய் கோபங்கொள்ளுவார்கள். இயேசுவின் வாழ்க்கையில் இந்த மாதிரியை நாம் காணமுடியும்.*

*இயேசுகிறிஸ்து தனிப்பட்ட விதத்தில் குற்றஞ்சாட்டப்பட்டபோது அவர் ஆட்டுக்குட்டியைப் போல, தன் தரப்பு நியாயத்தை விளங்கப்பண்ணுவதற்கும் முயற்சியெடுக்காமல் பெரும்பாலான நேரங்கள் மௌனம் சாதித்தார்.*

*அவர் வல்லமையுள்ளவர். அவர் தன்னுடைய சார்பில் நிற்கும்பொருட்டு தேவ தூதர்களின் சேனையை வரவழைத்திருக்கலாம். ஆனால் அவர் அதைச் செய்யவில்லை.*

*நம்முடைய பாவத்திற்காய் பலியாவதையும் சேர்த்து தேவனுடைய சித்தத்திற்கு பூரணமாய் கீழ்ப்படிந்தார்.*

*ஆனால் மற்றவர்களுடைய பிரச்சனை என்று வரும்போதோ அல்லது தேவனை கனவீனப்படுத்துகிற செய்கையை பார்க்கும்போதோ அவர் ஒரு சிங்கமாய் உருவெடுக்கிறார். அவர் பரிசேயர்களைப் பார்த்து சர்ப்பங்கள் என்றும் வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள் என்றும் கடிந்துகொள்ளுகிறார். அவர் ஆலயத்திற்குள் இரண்டு முறை பிரவேசித்து அங்கேயிருந்த ஏமாற்றுக்காரர்களையும் தேவனுடைய நாமத்தை கனவீனப்படுத்தினவர்களையும் துரத்தினார்.*

*வாழ்க்கையில் தனக்கு ஏற்படும் அவமானத்தையோ அல்லது காயத்தையோ ஒரு பொருட்டாக எண்ணி கிறிஸ்தவன் கோப்படமாட்டான். ஆனால் மற்றவர்களுக்கு ஏற்படுகிற காயங்களுக்காகவும் அநீதிக்காகவும் அவன் நீதியாய் கோப்படுவான்.*

*சுயநலமான கோபம் என்பது எப்போதுமே பாவம்.*

*சுயநலமில்லாத கோபம் என்பது உலகத்தின் ஒழுக்கநெறி பண்புகளில் ஒன்றாகும்.*

## *சாந்தகுணத்தின் அவசியம்*

***(அ) இரட்சிப்பின் ஆதாரம்.***

*“அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்.”*

*ஜனங்கள் தங்களுடைய ஆவிக்குரிய எளிமையை உணரும்போது தேவனுடைய இராஜ்யத்திற்குள் பிரவேசிப்பர்.*

*அது அவர்களின் பாவத்தைக்குறித்த துயரத்தை அவர்களுக்குள் ஏற்படுத்தும்.*

*அது அவர்களின் வாழ்க்கையில் சாந்தகுணத்தை ஏற்படுத்தும்.*

*அவர்கள் தேவனுக்கு முன்பாக நிற்கும்போது, அவர்கள் தங்களுடைய பாவ வாழ்க்கையை பார்க்கிறவர்களாதலால், அது அவர்களுக்குள் தாழ்மையை ஏற்படுத்துகிறது. அது தேவனுடைய ஆளகைக்கு அவர்களை அர்ப்பணிக்கச் செய்கிறது. பழிவாங்குதலை விட்டுவிட்டு, அவர்களின் சத்துருக்களை சபிப்பதற்கு பதிலாக அவர்களை ஆசீர்வதிக்கச் செய்கிறது.*

*இந்த குணாதிசயங்கள் நம்முடைய வாழ்க்கையில் இல்லையெனில், நாம் அவருடைய இராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டோம் என்று இயேசு சொல்லுகிறார்.*

*உலகம் முரட்டாட்டமானது. அது தேவனுக்குக் கீழ்ப்படியாது. ஆனால் விசுவாசிகள் தங்கள் வாழ்க்கையை தேவனுடைய கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தி, தேவனுக்கு கீழ்ப்படிதலையே தெரிந்துகொள்வர்.*

*அவர்கள் தேவனால் பலமுறை மன்னிக்கப்பட்டவர்களாதலால், மற்றவர்கள் தவறிழைக்கும்போது அவர்களும் அந்த மன்னிப்பை செயல்படுத்துகின்றனர். ஏனென்றால் தேவனுடைய சுபாவம் அவர்களுக்குள் மறைந்திருக்கிறது. அவர்கள் தங்களுடைய பாவத்தைக் குறித்தும் மற்றவர்களின் பாவத்தைக் குறித்தும் கோபங்கொள்ளுகிறார்கள். எனவே அதற்கு விரோதமாய் யுத்தஞ்செய்கிறார்கள்;.*

*இயேசுவின் வார்த்தைகள் பரிபூரணத்தை எதிர்பார்க்கவில்லை.*

*அதாவது, இந்த சாந்தகுணம் நம்முடைய வாழ்க்கையில் முழுமையாய் இல்லையென்றாலும், அதை நாடுவதும் அதில் வளர்ச்சியடைதும் அவசியமான ஒன்று.*

***(ஆ) கீழ்ப்படிதல்***

*சாந்தமாய் இருக்கும்படிக்கு தேவன் தன்னுடைய ஜனத்திற்கு கட்டளையிடுகிறார்.*

***கொலோசெயர் 3:12, ஆகையால், நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு;***

*நம்முடைய பரலோகப் பிதாவுக்கு கீழ்படியும் வகையில் பலவேளைகளில் நாம் சாந்தமாயிருக்க வேண்டியுள்ளது.*

*(இ) தேவனுடைய வார்த்தையைப் புரிந்துகொள்ளுதல்*

***யாக்கோபு 1:21, ஆகையால், நீங்கள் எல்லாவித அழுக்கையும் கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு, உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள்.***

*கர்த்தருடைய வார்த்தையின் விதையைப் பெற்றுக்கொள்ள நாம் சாந்தகணமுள்ளவர்களாயிருக்க வேண்டியது அவசியம். இருதயங்கள் நம்முடைய எஜமானனுக்கு கீழ்ப்படிய வேண்டும். வேதத்தின் போதனைக்கு இணங்காமல் முரட்டாட்டம் செய்தால், கர்த்தருடைய வார்த்தை நம்மில் நேர்த்தியாய் வேரூன்றி நம்மை பரிசுத்தப்படுத்தாது.*

*நம்முடைய எஜமானனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவதற்கும், அதின் அர்த்தத்தை விளங்கிக்கொள்ளுவதற்கும் நமக்கு சாந்தகுணம் அவசியப்படுகிறது.*

***யோவான் 7:17, அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவனெவனோ அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ, நான் சுயமாய்ப் பேசுகிறேனோ என்று அறிந்துகொள்ளுவான்.***

*நாம் தேவனுடைய சித்தத்தை செய்ய விரும்பவில்லையென்றால், நம்மால் தேவனுடைய வார்த்தையையும் சரியாய் விளங்கிக்கொள்ள முடியாது. நம்முடைய விருப்பத்திற்கு ஏற்றவாறு வேத வாக்கியத்தை திரித்து, அதின் மெய்யான போதனையை நிராகரிக்கிறவர்களாயிருப்போம்.*

*வேதத்தைப் புரிந்துகொள்ளவும் அதைப் பெற்றுக்கொள்ளவும் நமக்கு இந்த சாந்தகுணம் மிகவும் அவசியம்.*

*(ஈ) வேதத்தைப் போதிக்க*

***1 பேதுரு 3:15, கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம்பண்ணுங்கள்; உங்களிலிருக்கிற நம்பிக்கையைக்குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவுசொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்.***

*"மென்மை" என்பதும் "சாந்தம்" என்பதும் ஒரே அர்த்தம்கொண்ட வார்த்தைகள்.*

*நாம் மென்மையானவர்களாய் இல்லையெனில், தேவனுடைய வார்த்தையைக் கொண்டு மக்களை வஞ்சிக்கிறவர்களாயிருப்போம்.*

***எபேசியர் 4:15, அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார்.***

*தாழ்மையில்லாமல் நம்முடைய சுய அறிவினாலே கோபங்கொண்டு மற்றவர்களை கண்டிப்போம். வேத வார்த்தைகளைக் கொண்டு மக்களை கட்டியெழுப்பாமல், அதைக்கொண்டு அவ்வப்போது மக்களை குற்றப்படுத்திக்கொண்ட பரிசேயர்களைப்போல இருப்போம்.*

*நீதியான சினங்கொள்ளவில்லையென்றால், பாவத்தின் விளைவை மக்கள் ஒருபோதும் உணரமாட்டார்கள். கர்த்தருடைய வார்த்தையை சரியாய் போதிக்க நமக்கு சாந்தகுணம் அவசியப்படுகிறது.*

## *சாந்தகுணத்தில் வளருதல்*

***சாந்தகுணத்தில் வளருவது எப்படி?***

*1. **தேவனைக் கேளுங்கள்.***

*சாந்தகுணம் என்பது இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு குணாதிசயம். அது பரிசுத்த ஆவியானவரின் கனிகளில் ஒன்று.*

***கலாத்தியர் 5:23, சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை.***

***கலாத்தியர் 5:19-20, மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன; அவையாவன: விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், 20. விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள்,***

*சாந்தம், இச்சையடக்கம் போன்ற தெய்வீக குணாதிசயங்களைப் பெற்றுக்கொள்வதற்கு நாம் பரிசுத்த ஆவியானவரிடத்தில் மன்றாட வேண்டும்.*

*2. **கிறிஸ்துவின் சீஷனாயிரு.***

***மத்தேயு 11:29, நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்.***

*வேதாகம காலகட்டத்தில் ஒரு இளம் மாட்டை அனுபவமுள்ள மாட்டோடு சேர்த்து கட்டிவிடுவர். அவ்வாறு செய்யும்போது இந்த இளம் மாடானது தானாய் பயிற்சியை பெற்றுக்கொள்ளும்.*

*கிறிஸ்து சாந்தகுணத்திற்கு ஒரு அழகான உதாரணம். நாம் ஜெபத்தின் மூலமாகவும், வேதாகமத்தைப் படிப்பதின் மூலமாகவும், ஊழியம் செய்வதின் மூலமாகவும் கிறிஸ்துவுக்கு நம்மை ஒப்புவித்தால், அவர் நம்மை அவரைப்போல மாற்றுவார்.*

*மக்கள் நம்மை விமர்சிக்கும்போது நம்முடைய வாயை மூடிக்கொண்டு இருப்பது எப்படியென்று கிறிஸ்து நமக்கு பயிற்சியளிக்கிறார். மேலும் தேவன் நம் சார்பில் இடைபடுவார் என்ற நம்பிக்கையை நம்மில் ஏற்படுத்துகிறது.*

*அவர் நமக்கு, தேவனுடைய மகிமையும் நீதியும் எல்லாருக்கும் கிடைக்கும் நீதியுள்ள கோபங்கொள்ளுவது எப்படி என்பதைக் கற்றுக்கொடுக்கிறார்.*

*3. விசுவாசத்தில் வளருதல்.*

*ஒரு காட்டுக்குதிரை அடக்கப்பட்ட தன்னுடைய எஜமானனுக்கு எவ்விதம் கீழ்ப்படிய கற்றுக்கொள்ளுகிறதோ, அதேபோன்று நாமும் நம்முடைய தேவனை நம்பி சாந்தகுணத்தில் வளர பழகவேண்டும்.*

*இதே கருத்து சங்கீதம் 37இல் வலியுறுத்தப்படுகிறது. அதைத்தான் மத்தேயு 5:5 பதிவுசெய்கிறது.*

***சங்கீதம் 37:1-3, பொல்லாதவர்களைக்குறித்து எரிச்சலடையாதே; நியாயக்கேடுசெய்கிறவர்கள்மேல் பொறாமைகொள்ளாதே. 2. அவர்கள் புல்லைப்போல் சீக்கிரமாய் அறுப்புண்டு, பசும்பூண்டைப்போல் வாடிப்போவார்கள். 3. கர்த்தரை நம்பி நன்மைசெய்; தேசத்தில் குடியிருந்து சத்தியத்தை மேய்ந்துகொள்.***

*தேவனை பொருட்படுத்தாத, நீதிமான்களை துன்புறுத்தும் உலகத்தின் செழிப்பில் ஆர்வம் காட்டுவது எளிது. அது நம்மை சோர்வுக்குள்ளாக்கி, உலகத்தின் பாதையைக் காட்டுகிறது.*

***சங்கீதம் 37:10-11, இன்னுங் கொஞ்சநேரந்தான், அப்போது துன்மார்க்கன் இரான்; அவன் ஸ்தானத்தை உற்று விசாரித்தாயானால் அவன் இல்லை. 11. சாந்தகுணமுள்ளவர்கள் பூமியைச் சுதந்தரித்து, மிகுந்த சமாதானத்தினால் மனமகிழ்ச்சியாயிருப்பார்கள்.***

*அதேபோல, இன்னொரு ஞானப்பாடலான சங்கீதம் 73இல், துன்மார்க்கரின் வாழ்வைக் காண்கையில் தன்னுடைய கால்கள் சறுக்குகிறது என்று ஆசாப் கூறுகிறார்.*

***சங்கீதம் 73:2-3, ஆனாலும் என் கால்கள் தள்ளாடுதலுக்கும், என் அடிகள் சறுக்குதலுக்கும் சற்றே தப்பிற்று. 3. துன்மார்க்கரின் வாழ்வை நான் காண்கையில், வீம்புக்காரராகிய அவர்கள்மேல் பொறாமைகொண்டேன்.***

*அதின் முடிவு என்ன என்பதை அறிந்து தேவ சமுகத்தில் பிரவேசிக்கும் வரை அதை அறியாதிருக்கிறார்.*

***சங்கீதம் 73:17, அவர்கள் முடிவைக் கவனித்து உணருமளவும், அது என் பார்வைக்கு விசனமாயிருந்தது.***

*நாம் தேவனுடைய தேசத்தையும் அவருடைய ஆசீர்வாதத்தையும் சுதந்தரிக்கவும் விரும்பினால், தேவனுடைய பரிசுத்த சமுகத்திற்கு வந்து, உலகப்பிரகாரமாய் வாழுகிறவர்களின் முடிவை முதலில் பார்க்கவேண்டும்.*

*நம்மோடு இருப்பதற்கும் நம்மை ஆசீர்வதிப்பதற்கும், துன்மார்க்கரை தண்டிப்பதற்கும் நாம் தேவனை நம்புவதற்கு பழகிக்கொள்ளவேண்டும்.*

***தேவனுடைய விசுவாசத்தில் எவ்விதம் வளருவது?***

***ரோமர் 10:10, நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும்.***

*நாம் கர்த்தருடைய வார்த்தையின்படி வாழ்ந்தால், அதினால் நம்முடைய சிந்தை மறுரூபமாக்கப்படும். தேவனுடைய இராஜ்யத்தில் முந்தினோர் பிந்தினோராயும், பிந்தினோர் முந்தினோராயும் பிரவேசிப்பார்கள் என்பதை நாம்*

*அறிந்துகொள்ளவேண்டும். பெருமையுள்ளவர்களும், மேட்டிமையான இருதயம் கொண்டவர்களும் தேவனுடைய இராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை, சாந்தமும் மனத்தாழ்மையும் உள்ளவர்களே அதில் பிரவேசிப்பர். கர்த்தருடைய வார்த்தையின் படி வாழாமல் இருப்போமானால், நம்முடைய விசுவாசம் பெலவீனமடைந்து சோர்ந்துபோய், உலகத்தின் பாதையைத் தெரிந்துகொண்டு, பூமியை சுதந்தரிக்க முடியாது.*

## பூமியை சுதந்தரித்தல்.

***பூமியை சுதந்தரித்தல் என்றால் என்ன?***

*சாந்தகுணமுள்ளவர்கள் பூமியை சுதந்தரிப்பர் என்று இயேசு சொல்லுகிறார்.*

*இந்த வார்த்தையை யெகோவா சாட்சிகள் போதனையாளர்கள் பயன்படுத்தி, சாந்தகுணமுள்ளவர்கள் பூமியை சுதந்தரிப்பதினால் பூமியானது நித்தியமானது என்று போதிக்கின்றனர். என்ன பெலவீனமான நம்பிக்கை!*

*தேவன் தான் பூமியை சிருஷ்டித்தார்.*

*கிறிஸ்தவர்களின் நம்பிக்கை தற்போதுள்ள பூமியல்ல.*

*2 **பேதுரு** 3:10-12, **கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்.** 11. **இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்!** 12. **தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருங்கள்; அந்த நாளில் வானங்கள் வெந்து அழிந்து, பூதங்கள் எரிந்து உருகிப்போம்.***

*பின்பு, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயின; சமுத்திரமும் இல்லாமற்போயிற்று (**வெளிப்படுத்தல்** 21:1).*

***சாந்தகுணமுள்ளவர்களுக்கு தேவன் அளிக்கும் ஆசீர்வாதம் புதிய பூமியா?***

*விசுவாசிகளுக்கு தேவன் அந்த ஆசீர்வாதத்தைக் கொடுக்கிறார் என்பது உண்மையே. ஆனால் இயேசுவின் போதனையைக் கேட்டவர்கள் இதை வேறுவிதமாய் புரிந்துகொண்டனர்.*

*முதலாவது, இங்கு "பூமி" என்பதற்கு பயன்படுத்தப்பட்ட வார்த்தை நிலத்தையும், சிருஷ்டிக்கப்பட்ட பூமியையும் குறிக்கிறது.*

*இரண்டாவது, இந்த வாக்கியம் நாம் ஏற்கனவே பார்த்த சங்கீதம் 37லிலிருந்து வருகிறது. இந்த சங்கீதம் ஆதியாகமம் 15ஆம் அதிகாரத்தில் ஆபிரகாமுக்கு தேவன் வாக்குப்பண்ணிய தேசத்தைக் குறித்து குறிப்பிடுகிறது. இயேசுவும் யூதர்களுக்கு, ஆபிரகாமுக்கு வாக்குப்பண்ணப்பட்ட தேசமாகிய எருசலேமை தேவனுடைய இராஜ்யத்தின் அங்கமாய், தாவீதின் வம்சாவழியில் வரும் மேசியாவினால்*

*அரசாளப்படும் என்பதை குறிப்பிடுகிறார். இந்த சூழ்நிலையில் பூமி என்று குறிப்பிடப்பட்டது இதுவே.*

***யூதரல்லாத கிறிஸ்தவர்கள் எங்கு போவார்கள்?***

*நாம் கிறிஸ்து இயேசுவின் மூலம் விசுவாசத்தில் தேவனுடைய பிள்ளைகளாக்கப்பட்டிருக்கிறோம்.*

*ரோமர் 11:17, **சில கிளைகள் முறித்துப்போடப்பட்டிருக்க, காட்டொலிவமரமாகிய நீ அவைகள் இருந்த இடத்தில் ஒட்டவைக்கப்பட்டு, ஒலிவமரத்தின் வேருக்கும் சாரத்துக்கும் உடன்பங்காளியாயிருந்தாயானால்,***

*1 பேதுரு 2:9, **நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்.***

*ரோமர் 8:17, **நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே; கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்.***

*2 தீமோத்தேயு 2:12, **அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்; நாம் அவரை மறுதலித்தால், அவரும் நம்மை மறுதலிப்பார்;***

*அயிரவருட அரசாட்சியை இயேசு நிலைப்படுத்தும்போது, யூதரல்லாதவர்களும் சேர்த்து அவரை நம்பி அவரைப் பின்பற்றியவர்களும் அவரோடே சேர்ந்து அரசாளுவார்கள். ஆகையால் சாந்தகுணமுள்ளவர்கள் பூமியை சுதந்தரிப்பர்.*

*ஆனால் சாந்தகுணமுள்ளவர்கள் பூமியிலிருக்கும்போதே சில ஆசீர்வாதங்களுக்கு பாத்திரவான்களாகிறார்கள்.*

***முதலாவது,** சாந்தகுணமுள்ளவர்கள் தேவனை நம்புவதால், அவர்கள் சமாதானமடைவார்கள்.*

***ஏசாயா 26:3, உம்மை உறுதியாய்ப் பற்றிக் கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்.***

***இரண்டாவது,** தேவன் அவர்களை போஷிக்கிறார் என்னும் வாக்குறுதியை அவர்கள் பெறுகிறார்கள். ஏனெனில் அவர்கள் முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுகிறவர்கள்.*

***மத்தேயு 6:33, முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்.***

***மூன்றாவது,** தேவன் அவர்களை நீதியின் பாதையில் நடத்தி, தன்னுடைய வழியை அவர்களுக்குக் காண்பிப்பார்.*

***சங்கீதம் 25:9, சாந்தகுணமுள்ளவர்களை நியாயத்திலே நடத்தி, சாந்தகுணமுள்ளவர்களுக்குத் தமது வழியைப் போதிக்கிறார்.***

***நான்காவது, அவர்கள் மனரம்மியமாய் இருக்கக் கற்றுக்கொள்வார்கள்.***

***பிலிப்பியர் 4:11-12, என் குறைச்சலினால் நான் இப்படிச் சொல்லுகிறதில்லை; ஏனெனில் நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டேன். 12. தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும்; எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்பதியாயிருக்கவும் பட்டினியாயிருக்கவும், பரிபூரணமடையவும் குறைவுபடவும் போதிக்கப்பட்டேன்.***

***கடைசியாக,*** *அவர்களுடைய எதிர்காலத்தைக் குறித்த தேவனுடைய வாக்குத்தத்தத்தில் அவர்கள் நம்பிக்கையுள்ளவர்கள் என்பதினால், அவர்களின் நிகழ்கால வாழ்க்கையில் அவர்களுக்கு உறுதியான நம்பிக்கை ஏற்படுகிறது. கடினமான மக்கள் அவர்களை ஒடுக்குவார்கள் (ஆமோஸ் 2:7), ஆனாலும் அவர்கள் பூமியை சுதந்தரிப்பார்கள்.*

***சங்கீதம் 37:11, சாந்தகுணமுள்ளவர்கள் பூமியைச் சுதந்தரித்து, மிகுந்த சமாதானத்தினால் மனமகிழ்ச்சியாயிருப்பார்கள்.***

*இப்போதும் எப்போதும் சாந்தகுணமாயிருப்பதினால் வருகிற ஆசீர்வாதங்களை நீங்கள் அறிவீர்களாக.*

## *முடிவுரை*

***"பெரும்பாலான மக்கள் ஆஸ்திகளை வைத்திருப்பவர்கள் அல்ல; ஆஸ்திகள் தான் அவர்களை வைத்திருக்கிறது?"***

*பூமியின் ஆசீர்வாதங்களோடு விசுவாசிகள் தங்களை வெவ்வேறு விதமாய் தொடர்புபடுத்திக்கொள்வது ஏன்?*

*சாந்தகுணமுள்ளவர்களை அதிகாரத்தில் ஏற்படுத்துவதின் மூலம் தேவனை எவ்விதம் உணர்ந்தீர்கள்?*

*கடினமானவர்களும், பெருமையுள்ளவர்களும், கொடூரமானவர்களுமே பூமியை சுதந்தரிக்கமுடியும் என்று உலகம் சொல்லுகிறது. இதுவே பூமியில் வாழ்ப்பவருக்கான தகுதி. ஆனால் தேவனுக்கு பயந்து, தேவனையே நம்புகிற சாந்தகுணமுள்ளவர்களே பூமியை சுதந்தரிக்கமுடியும் என்று கிறிஸ்து சொல்லுகிறார்.*

*தன்னுடைய எஜமானனுக்கு முன்பாக தங்களை தாழ்த்தி, அவருடைய வழிநடத்துதலுக்கு தங்களை பூரணமாய் அர்ப்பணித்தவர்களே பூமியை சுதந்தரிப்பர்.*

*நீங்களும் சாந்தகுணமுள்ளவர்களில் ஒருவரா?*